உ

கணபதி துணை.

சினிமா சிந்தாமணி மெட்டுகளமைந்த

வள்ளி திருமணம் என்னும்

முருகன் திருமணம்.

2607
3357
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 OCT 1938
MADRAS

இ[illegible]

காரு[illegible]

அடுக்குமொழி

பி. ஆவுடையப்பன்செட்டியார்

இயற்றியது.

பாப்பாக்குடி

ந. சுப்பிரமணியன் செட்டியார்

விருப்பத்தின்படி

அம்பாசமுத்திரம்,

ஸ்ரீ ராமகிருஷ்ண பிரஸில்,

அச்சிடப்பெற்றது.

முதற்பதிப்பு } 24-7-38. { இதன் [illegible] 0—1—0

OFFICE OF THE REG
13 OCT 1938
MADRAS

உ
கணபதி துணை.

முருகன் திருமணம்.

1. துதி.

இராகம் தோடி - தாளம் ஆதி.

ப- கணநாயகா காப்பாற்றுவாயே (கணநா

அ- குணமாயுன்பாதம் கும்பிட்டேத்தியுய்யும்
கொள்கையான தாசர்க்
குற்ற இன்பம்செய்யும் (கணநா

ச- எந்த இடமீதும் ஏகமாய் விளங்கும்
ஈசனே நல்வித்தைக்கிச்சையாய்த்துலங்கும்
சிந்தைமறவாதுன் சேவடி வணங்கும்
சிறுவனுக்குக்கல்விச் செல்வமேவழங்கும் (கணநா

ப — என்பது பல்லவி,
அ — என்பது அனுபல்லவி,
ச — என்பது சரணம்.

2. ஷண்முகலீலை.

விருத்தம்.

தேவர்முறை யேற்றரன் றிருநுதற் கண்ணின்
தெரித்தனற் பொறியாறையும்.
தென்றலனல் கொண்டுவிட சரவணத்தினி
லாறு சேயாய்த் தனித்திலங்க
ஆவலுடையுமையின லாறுமோருருவாகி
யங்குள்ள நங்கையறுவர்
அகமகிழ நற்கயிலை மேவி யாகத்துமறி
யைக் கவர்ந்தயனைக்குகைக்
காவலிலடைத்தரற் கரியபிரணவமோதி
கந்தமாதன மகன்று
கயிலைவரும்வழியிலே அமிர்தவலி சுந்தரிக்
கருளீந்து வேற்கைகொண்டு
மாவரை பிளந்தசுரர் கிளைவென்று களநின்று
வாதுறுஞ் சேவல்மயிலை
வளர்கொடிப் பரியாக்கி தெய்வானை வள்ளியை
மணந்தருள் புரிந்தகுகனே.

3. குறச்சேரிவளம்.

(ஆகாசப் பந்தலிட்டு) என்ற மெட்டு

கொம்பு முரசுதப்பு கொடியிலே போட்டிருக்கும்
வாசலில் வேங்கைமரம் வளர்ந்துநிழல் கொடுக்கும்
பிரியினலூஞ்சலிட்டுப் பிள்ளைகளும் விளையாடும்
கூடைகளுக்குள்ளேநின்று காடைக்குஞ்சு விளையாடும்
போர்க்கோழி கூவிநிற்கும் பொல்லாத நாய்குலைக்கும்
மானை வளர்ப்பர் சிலர் தேனை யெடுப்பர் சிலர்
வெள்ளிக்கிழமைதொறும் வள்ளிக்கிழங்கெடுப்பார்
வெம்பாறைமீதுதினை யம்பாரம் போட்டிடுவார்
வனப்பையுடைய பெண்கள் தினைப்புனங்காத்திடுவார்
பலித்திடும் நற்குறியும் குறத்திகள் சொல்லிடுவார்
சொந்தத்தெய்வம் கந்தனென்று வந்தனையும் செய்திடுவார்
நலமுள்ள குறச்சேரி -- அதற்கு
நம்பியே அதிகாரி.

4. குலதெய்வ வணக்கம்.

அரி மாதவனே என்ற மெட்டு.

1. வடி—வேலவனே கருணைகரனே—மயில்
மீதினி லேறிடும் ஆறுமுகனே—வர
மேதரு வாயுயர் வானகுகனே—ஞான
மேவும் பரனே உமாதேவி மகனே—வடிவே

2. எம்மைக்-காப்பவனே துயர்தீர்ப்பவனே—மலர்க்
கால்தொழு வோரைக்கண் பார்ப்பவனே—கதி
காட்டிநல் வீட்டினிற் சேர்ப்பவனே—துதி
ஏற்பவனே இன்சொல் கேட்பவனே—வடி—வேல

5. குழந்தை கண்டு மகிழ்தல்.

(பேசுந்தரமோகாதல் - மெட்டு)

குழந்தையை வாங்கி நங்கை மனமகிழ்வானாள்.
குகனை நினைந்து அழகை வியந்து
குமரன் கருணையாலே கிடைத்ததென்றுணர்ந்து— கு
எண்ணங்கைகூட இடரதும்ஓட
ஏழைபுதையலைக்கண் டெடுத்ததுபோலே— கு

6. நங்கை வள்ளியைத்தேற்றி அனுப்புதல்.

(மெட்டு - ஈனஜென்மமெடுத்தேன்)

1 கானிலுள்ள புனத்திலென் கண்மணீ
காவலைச்செய்திங்கே வாயென் கண்மணீ
2 தேனுங்கனியும் செழுந்தினைமாவும்
தினமுமனுப்புவேன் சேடியுடன்போய் -கானி
3 பரண்மிசைமேவி பறவைகளோட்ட
பண்புள்ளதோழி பகர்வதைக்கேட்டு கானி

7. தினைப்புனம் காவல் புரிதல்

இராகம் - கமாசு. தாளம் - ஆதி.

ப- ஆலோலமென்றுகூவினாள் - அழகுறகுறமகள்- ஆ
அரண்மனை தனைவிட்டு வுயர்வுள்ளபரணுற்று- ஆ

அ சீலமதிமிகுந்த சேடியோடுறவாடி
காலைச்சுனைநீராடிக் கனிவாயிசையும்பாடி -ஆ
உணவு வழங்கிடு புனமிசைநாடி
மிகவு நெருங்கிடு பறவைகளோட
கையில் விளங்கும் விசையொடு மோதும்
வெய்ய கவண்கல் கயிறதை வீசி -யாலோல

8. நற்குறியுரைத்தல்.

முருகனருளால், ஒரு குறத்தியானவள் சிரத்திற் கூடையும், கரத்தில் பிரம்பும் எடுத்துக்கொண்டு வெள்ளிமலையைவிட்டுவள்ளி மலைச்சாரில் சிற்றூர் வந்து, நம்பிராஜன் பத்தினியான நங்கையினிடம் யாசகம் கேட்டாள்.

நங்கை:- உனக்கு எந்தவூர்? உன் பெயரென்ன? நீ குறி சொன்னால் பலிக்குமா?

குறத்தி:- (மெட்டு - பச்சைமலை பவளமலை)

1 வரமுதவும் கழுகுமலை முருகனருளாலே நாங்கள்
மறைக்காமனுரைக்குங்குறி பலிக்கும் புவிமேலே
2 சிலைக்குறவர் வசிக்கும்வெள்ளி மலைக்குறத்தியம்மே
சிறந்தகுறி செப்புமென்பேர் சிவகாமியம்மே.

அம்மே! எனக்கு வெள்ளிமலை. என் பெயர் சிவகாமி. நாங்கள் சொல்லும் குறி கட்டாயம் பலிக்கும்.

நங்கை:- அப்படியானால் நான் நினைத்திருப்பதைச்சொல். உனக்கு வேண்டுவன தருவேன்.

3 மண்ணுமில்லை பொன்னுமில்லை மற்றதில்லையம்மே
மனந்தனிலோர் குழந்தைபற்றி வருந்துகிறாயம்மே.

நங்கை:- நீ சொல்வது சரியாயில்லை. எனக்கு இப்போது குழந்தை இருக்கிறதா? இல்லையா?

4 ஆளுதற்கு வாழுகின்றது எழுபிள்ளையம்மே
அன்னியமாய்ப்பின்னுமொரு கன்னியுமுண்டம்மே

நங்கை:- அப்படியானால் நான் வருந்துகிறது ஆணைப்பற்றியா பெண்ணைப்பற்றியா?

5 கருத்தினிலே வருத்தமுடன் நினைத்ததுதானம்மே
கண்ணைப்போல வளர்த்துவரும்பெண்

நங்கை:- நீ அதை அன்னியமென்று சொன்னையே அஃதென்

6 வயிற்றுப்பிள்ளையில்லையது வளர்ப்புப்பிள்ளையம்மே
வனத்தில்போனஇடத்திலேகண்டெடுத்தபிள்ளையம்

நங்கை:- இப்போதான் சரியாய்ச்சொன்னாய். என் கன்னி
எப்பேர்ப்பட்ட மணமகன் கிடைப்பான். கறுப்ப
சிவப்பா? கட்டையா? நெட்டையா?

7 கன்னிக்கேற்ற கண்ணிறைந்த கணவன் நல்லுதாரன்
கருதும் வாலைப்பருவமுள்ள பெரிய வேலைக்காரன்.

அம்மே! உன் பெண்ணுக்குத்தகுந்தபுருடன். நல்ல அ
குடையவன். பெரிய வேலையுடையவன். கிழவனல்ல, குமர
தான். ஆனால் இரண்டாந்தரம்போல் துலங்குகிறது.

நங்கை:- (மனம் சடைந்து) அடி! வேலைக்காரனென்றையே
எந்தக்கடையில், அல்லது (எந்தக்கிட்டங்கி, என்
கம்பெனியில்) என்ன சம்பளம், படிப்பிராதே
மதிப்புமிராதோ? கல்யாணமும் எப்போது நட

8. மதிப்புடையோன் தகப்பனிலும் படிப்புடையோனம்மே
மணக்கோலம் சுருக்காக நடக்கும் இனியம்மே -

அம்மே! எல்லாந்தெரிந்தவன். கூடியசிக்கிரம் கல்யாணம்
நடக்கும். நேரமாகிறது. என்னை அனுப்புங்கோ.

நங்கை:- குடியிருக்க வீடாவது உண்டுமா? நன்செய், புன்செய்
இருக்குமா? ஆஸ்தி யுடையவன் தானா?

9 அழகுடையோன் பொருளுடையோன்
அவனும் குமரனம்மே.
அந்தப்பிள்ளைக் கெந்தஇடமும்
சொந்தமாகும் அம்மே.

நங்கை:- வேலைபார்க்க முக்கியமாய் வசிக்கும் இடம் எது?

10 மலைக்குகையும் நதிக்கரையும் கடற்கரையும் அம்மே.
மணக்குகையும் அயிற்கடவுள் வசிக்குமிடம் அம்மே!

(நங்கையானவள் நற்குறி சொன்னவளை, உபசரித்தனுப்பினள்.)
இதன் பின் நாரதர் தினைப்புனம் வந்தனர்.

9. நாரதர் வருதல்.

நம்பினேனுன் பதம் நாரணா என்ற மெட்டு.

தர்:- தனியே இருக்கும் நீ யாரம்மா
தாமதிப்ப தெந்தவூரம்மா—மான்
கனியே யுனக்கென்ன பேரம்மா—புனம்
காவல்செய்வதேது கூறம்மா—தனியே

வள்ளி.- தந்தையின் பேர்நம்பி ராஜனே—வேடர்
தம்முடன் வாழ் சிற்றூர் வாசனே
எந்தன்பெயர் வள்ளி மாமுனி—என்னை
யீன்றவள்பேர் நங்கை மோகினி— தந்தை

10. முருகன் பெருமை மொழிதல்.

பஜனை செய்வோம் கண்ணன் நாமம் என்ற மெட்டு.

1. தணிகையில் வாழ்வடி வேலன்—திருத்—தணி
தனிக்குமுனக்கந்த ஷண்முகநாதனே
தகுந்த கணவன் தானே-அவன்—தணி

2. வனிதையிலுயர்ந்த நீ யந்தக்குகனை
மணஞ்செய்து சுகம் பெறுவாயே
இனியிங்குதனியா யிருந்திடவேண்டாம்
எனது மொழியைக் கேட்பாயே-அவன்—தணி

3. அருட்கடலாகும் அவனைக்கல்யாணம்
புரியவும் தகுதியுள்ளவள் நீயே
இருவர் மணத்தையும் பார்ப்பதற்கு வந்தேன்
என் திறம் பின்பறிவாயே-அவன்—தணி

11. தெரிசனம் செய்தல்.

கிருஷ்ணா கிருஷ்ணா என்ற மெட்டு.

1. கந்தா கந்தா தணிகாசலம் வாழ்—கந்
கருதும் தாசரின் துயரந் தீர்க்கும்—கந்

2. கருணை புரிவாய் வேலவனே
காத்தருளாறு மாமுகனே
கண்பார் அழகுள்ள மயில்வாகனனே—கந்

302

3. இந்திரன் புதல்வியை மணந்தவனே
இலக்கண முழுதும் மிகத்தெரிந்தவனே
இனிதா மணமலர்க் கடம்பணிந்தவனே — கந்

4. வழியிற் கண்டேனொரு மாங்கனியே
வாய்க்குமதுநல்ல தாமுள்ள கனியே
மனதுக்கிசையின்பந்தருமணக் கனியே — கந்

12. உருமாறுதல்.

விருத்தம்.

ஆறுமுகந்தனி லஞ்சு முகமறைத்து
ஒருமுக[illegible]ய யழகமைத்து
ஏறுமாமயி[illegible]றைத்து வேல்மறைத்துக்
கை[illegible]ல்லம் பெடுத்துக் காலில்
கூறுமிதியடி தொடுத்து நெற்றியின்மைப்
பொட்டிசைத்துக் கொண்டைசாய்த்து
மாறுகருந்துணிதரித்து வர்ய்த்த குறவடிவெடுத்து
வழிபார்த்தாரே.

13. வள்ளியைக்கண்டு மகிழ்வுறல்.

ஞானக்கண் ஒன்று இருந்திடும் என்ற மெட்டு.

வேடப்பெண் ணென்று விளம்பினர் நாரதரே
தேவப்பெண் ணிவளென்று செப்பாத தென்னே — வேட
வீடதைப் போலவே விளங்கிடும் பரணிலே
மேவுமிவளை யெந்த விதம் மணந்திடலாம் — வேட
கானகப் புனந்தனைக் காவலைப் புரிந்திடும்
கன்னியா யெனக்கின்பக் காதல் தருமிவளை — வேட

14. மானின் அடையாளம் வினவல்.

விருத்தம். (மோகனம்)

கான் மீதுலாவிடும் நீண்மானினங்களில்
கலையெனச்சொல்லும் ஆண்மான்
காதல்மிகுமான் மோகப்பசிதீர்க்குமான்
எனது கணைபோலெதிர்ப்பட்டமான்

மேன்மையுறுமான் அதோமிக்கவும்
சிறுமான் விளங்கிடும் சாதிமான் தன்
மேற்புள்ளி மேவாதமான் வெற்றிபெருமான்
விரும்புபுல் மேயாதமான்

தான்குல மெனுங்கிளை பிரியாதமான்
இதில் தங்குமான் என்கைக்கிசைத்
தங்கநிறமுள்ள இருகொம்புள்ளமான்
இந்தத்தருணத்திலிக்கணுர,

நான் கண்டமான் அதைத்தான் கண்டதுண்டுமா
நானிலம் புகழுமானே.
நல்லமானே பதில் சொ[illegible]மானே
இசைநாயகி வள்ளிமானே.

15. குறப்பெண் வெறுப்புற்றுரைத்தல்.

அந்தமிகுந்த முகுந்த என்ற மெட்டு.

மேவாம லிந்தவனத்தைவிட்டப்பாலே போ போ
நீ போ போ நீ போ போ போ போ—மே.
வேடனே முழு மூடனே குடி
கேடனே ஓடிப்போ போ – மேவா.

இத்ததி இங்குவந்து வித்தகம் பேசிடுமுனக்கு நான்
எத்தனையோ புத்தி எடுத்துரைத்தும் அத்தனையுந்தள்ளி
மெத்தவும் எனைக் கெஞ்சி குறவஞ்சி வஞ்சியென்று—மே

16. வளையல் விற்றல்

கூவுதுபார் குயில் என்ற மெட்டு.

வாங்கலையோ வளையல் வாங்கலையோ
கன்னியரானவர் கைகளிலேறும்
சின்ன வயசுப்பெண்கள் தேடும் மணிவளையல் வா
பல பலவிதமாய் பளபளப்பாய் மின்னும்
கல கலவெனவொலி காட்டும் மணிவளையல்—வா
மடக்கொடிமின்னர் விலைக்குத்த தந்தபடி
அடுக் கடுக்காய் கையில் அடுக்கும் மணிவளையல்—வாங்

17. வளையல் குணம்கூறல்.

ராதே வுனக்குக்கோபம் என்ற மெட்டு.

1. பாலாமணிவளையல் மேலானதே-புதிய—பா
பாலியமாகிய மாதர்களே யணியும்—பாலா

2. பச்சைவளையலி லிச்சையுண்டா
பட்டுநவரங்கத்தட்டு சதுரங்கப்—பச்

3. சின்னவளையல் கைக்குச்சேராதடி
வன்னத்தினை மாவைத்தின்னும்பெண்ணே-இந்த—சி

4. குண்டுமணிவளையல் ரண்டுபணம் ஆகும்
கொண்டவனிடத்து முரண்டுபண்ணமல்செய்யுங்-குண்

5. வெள்ளை வளையலிருக்கட்டுமா—பெண்மேல்
வெறுப்புள்ள நாதனுக்கும்
விருப்பங் கொடுக்கும்—இந்த—வெள்

6. வெள்ளைநிற வளையல் என்னவிலையாகும்—வெள்
வேந்தர்மனைக்குகந்த காந்தியுடைய இந்த—வெள்ளை

18 கைரேகை பார்த்தல்.

(மாயப்ர பஞ்சத்தில் என்ற மெட்டு.)

1 லோகத்திலேயுன்னைப் போலபெண்வேறில்லை
உந்தன்கை போலெங்கும் நான் கண்டதேயில்லை.
உனக்குவிவாஹமும் சுருக்கினிலாகும்
யோகக்கை ரேகையீ தாகையி னாலே
ஒரு பெரியோனே வலியவே தானே
ஓதும்நின் மோகம தாய்வந்து சேர்வான்
உன்னைத்திருமணம் தான்புரிவான். பெண்ணே-உந்

2. மேட்டினி லிவ்வரை தோன்றுவதாலே
காட்டில் பிறந்தாய் பின் வீட்டில் வளர்ந்தாய்
தமையன் மார்கள் ஏழு பேர்கள்
தந்தைசொல்லா லிங்கே வந்து கல் வீசிக்
கூட்டப்பறவைக ளோட்டுகின்றாய்-பெண்ணே—உந்தன்

3. வனக்கிளியே இன்னும் உனக்கொருயோகம்
இருக்கிறதே யதை யுரைக்கிறேன் கேட்பாய்
மலைமிசைவாழும் குலதெய்வமான
வேற்படைவீரனே மாப்பிள்ளையாவான்
வேலையுள்ளோன் என்னைப் போலிருப்பான்.
பெண்ணே—(உந்த)

19 தினைதின்று வருந்தல்.

(திவ்ய தேரிசனந் தரலாகாதா என்ற மெட்டு.)

கொஞ்சம் தயவுசெய்திடுவாய் மானே—இந்தத்
தருணம் நீ கொஞ்சம்—தயவு
அழகிலுயர்ந்திடும் பெண்ணே இதுசெய்ய
லாமா வுனக்கென்ன வஞ்சம்—கொஞ்சம் (தயவு)
சிருடன்தெள்ளிய செந்தினை மாவைத்
தேனுங்கலந்து பிசைந்தாய்
நேரினில் மெள்ள நீயெனக் கீந்தாய்
நானும் பாராமல்தின்றேனே—கொஞ்சம் (தயவு)
நாவுமுலர்ந்தது விக்குதே பாவி
நஞ்செனும் விஷத்தைத் தந்தாயோ
மாவையும் தின்றேன் மயக்கமா யெனக்கொரு
மாதிரியாய் வருகிறதே—கொஞ்சம் (தயவு)

20. சுனையில்விழுந்து புலம்பல்.

ஞானக்கண் ணென்று என்ற மெட்டு.

தாகத்தால் தண்ணீர் அருந்திடும் வேளையிலே
சோகத்தால் தடுமாறி சுனையில் விழுந்தேன் மானே—தாக
காருண்யந் தானிலையோ கருதுமுன் மனதிலே
காதலுடனீ யென்னைக் கரை சேர்த்திடுவாய்—தாக
யாருக்கோ வந்திட்ட விருந்தென நினைந்தனை
நீருக்குள் விழுந்தது நினக்குச்சம்மதந்தானோ—தாக

21. முன்னோனை யழைத்தல்.

[தோடி ராகம்—ரூபக தாளம்]

ப நீதுணைவருவாய்— இந்த
நேரமே எம் முன்னால்வாரணமாயண்ணா—நீ

5. வழியில் வருபவரைப் பிடிக்கின்றதா
மதமும் பொழிந்து தான்நடக்கின்றதா?
வளர்ந்திட்ட கொம்பொன்று முறிந்திருக்கின்றதா
பெ.

23. வள்ளி கிழவரை ஏமாற்றல்.

(நந்த கேலரா மெட்டு.)

ஏச்சுப்போட்டேனே நானுங்களை
ஏச்சுப்போட்டேனே ஏ தாத்தா—ஏச்
ஏதுக்கினிமே லாசை யுமக்கு
இளமை முழுவதும் போனதால்-நான்—ஏச்

24. உறுதிமொழி கேட்டல்.

விருத்தம். சாவேரி.

உரைசெயும் மயிலே நின்சொல் லுறுதியாய் நம்பமாட்டேன்.
திரையிசை நின்குலத்தோர் தினந்தொழுந் தெய்வமான
தரைபுகழ் வேலர்மீது சத்தியஞ்செய்து தந்தால்
விரைவினில் யானைதன்னை விலகிடச்செய்வேன் மானே.

25. திருக்காக்ஷி யளித்தல்.

(சரவணகுக பஜனம் மெட்டு.)

தெரிசனம் கொடுத்தனனே—சிந்தை மகிழ்ந்து—தெ
துரிதமாய் வேலவன் சோதித்திடாமலே
அருமைக்குறவள்ளிமுன்—ஆறுமுகமாய்த்—தெரிசனம்

மங்களம் பாடல்.

இராகம்-சுருட்டி தாளம்-ஆதி.

மங்களம் சுப மங்களம் நித்யானந்த
மங்களம் ஜெய மங்களம்.
ஐங்கரநாதனுக்கும் ஆறுமுகவேலனுக்கும்
திங்கள் வதனவள்ளி தெய்வானை யன்னையர்க்கும்.—ம
இங்கிதமாயிதனை யென்றும் படிப்பவர்க்கும்
சங்கீத நேயருக்கும் தாசரனைவருக்கும்—மங்க

சம்பூரணம்.

அ காதல் படிக்கிந்தக் கானகத்தில் குறக்
கன்னிபயந்தென்னைக் கடிமண மதுசெய இதுததி—நீது

ச மன்னன் மகளாகி தன்னந்தனியான
கன்னல்மொழிவள்ளி என்னை மணந்திட
முன்னவணுகிய உன்னை நினைக்கிறேன்
பின்னம் வராமலே நன்னயமே செய்ய—நீ
யா னிதுவரை யுனை நினையாத பிழைதனை நீ பொறுத்
தே — இவ்விடத்தில் உரைத்த கருத்தை வெறுத்து
வனமேல் சினமாய்த் தனியாய் வழிவரு மவள் மனம்
வெருவவும் நினைவுறு மெனதுள மகிழவும்
மதமிகு பெரிய மிருகமெனும்
கரியுரு வுடனொரு நொடிதனில்—நீது

22. வள்ளி முறையிடல்.

(கிருஷ்ண கிருஷ்ண மெட்டு.)

(வள்ளி) 1. தாத்தா தாத்தா எனைக்காப் பாற்றும்
சரணம் செய்கிறேன் நீரிந்த வேளை தாத்தா

2. சொருபப் பெரியது நேரிட்டதே
தும்பிக்கை தூக்கி வீறிட்டதே
தூரத்திலே நின்று என்னைப் பார்த்திட்டதே தாத்

(கிழவன்) 1 பெண்ணே பெண்ணே என்னைத்தொடாதே
பெரிய யானையை வழியில் கண்டாயா பெண்

2. அதுவும் விரைவாய் வருகிறதா
அல்லது மெதுவா யசைகிறதா
அதுவுனக் குயரமாய்த்தான் தெரிகிறதா பெண்

3. குமரி கிழவனைத் தொடலாமா
கோபித்த யானை சும்மா போமா
கூசாம லெனைத்தொடுவது முறையாமா பெண்

4. ஊக்கமா யெவரையும் மறித்திடுமோ
ஒருவேளை யிந்த இடம் அடுத்திடுமோ
உன்னையும் என்னையும் தான் பிடித்திடுமோ பெண்

உ

கணபதி துணை.

இப்புத்தகம் இயற்றிய வித்வான் அவர்கள்,

இசையுடன்செய்துவரும்,

சரித்திரங்கள்.

	சிவமதம்.	விஷ்ணுமதம்.
1	விநாயகர் விரதம் (இலக்கணசுந்தரி)	முரளிகானவைபவம்
2	மார்க்கண்டேயர்	பிரகலாதன்
3	தெய்வானை திருமணம்	கௌஸல்யா கல்யாணம்
4	வள்ளி கல்யாணம்	சீதா கல்யாணம்
5	மீனாக்ஷி கல்யாணம்	வத்ஸலா கல்யாணம்
6	மனுச்சோழன்	சகுந்தோபாக்யானம்
7	காரைக்காலம்மையார்	சந்திரகாசன்
8	சிறுத்தொண்டர்	ஜெயதேவர்
9	திருநீலகண்டர்	கோராக்கும்பார்
10	கண்ணப்பநாயனர்	சரச்சேதுபக்தனம்
11	நந்தனர்	இராமதாசர்
12	சேந்தனர்	புரந்தரதாசர்
13	வல்லாள மகாராஜன்	கபீர்தாசர்

ந. சுப்பிரமணியன்செட்டியார்.

பாப்பாக்குடி.

(அம்பாசமுத்திரம் தாலுகா.)